ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

ஆர்ய தர்மம்.

वह्निस्तस्य जलायते जलनिधिः कुल्यायते तत्क्षणं
मेरुःस्वल्पशिलायते मृगपतिः सद्यः कुरङ्गायते ।
व्यालो माल्यगुणायते विषरसः पियूषवर्षायते
यस्याङ्गेऽखिललोकवल्लभतरं शीलं समुन्मीलति ॥ नीतिशतके ।

𑌵𑌹𑍍𑌨𑌿𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌜𑌲𑌾𑌯𑌤𑍇 𑌜𑌲𑌨𑌿𑌧𑌿𑌃 𑌕𑍂𑌲𑍍𑌯𑌾𑌯𑌤𑍇 𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌂
𑌮𑍇𑌰𑍂𑌃𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌶𑌿𑌲𑌾𑌯𑌤𑍇 𑌮𑍃𑌗𑌪𑌤𑌿𑌃 𑌸𑌦𑍍𑌯𑌃 𑌕𑍂𑌰𑌙𑍍𑌗𑌾𑌯𑌤𑍇 ।
𑌵𑍍𑌯𑌾𑌲𑍋𑌮𑌾𑌲𑍍𑌯𑌗𑍂𑌣𑌾𑌯𑌤𑍇𑌵𑌿𑌷𑌰𑌸𑌃𑌪𑌿𑌯𑍍𑌯𑍂𑌷𑌵𑌰𑍍𑌷𑌾𑌯𑌤𑍇
𑌯𑌸𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑍇𑌽𑌖𑌿𑌲𑌲𑍋𑌕𑌵𑌲𑍍𑌲𑌭𑌤𑌰𑌂𑌶𑍀𑌲𑌂𑌸𑌮𑍂𑌨𑍍𑌮𑍀𑌲𑌤𑌿॥𑌨𑍀𑌤𑌿𑌶𑌤𑌕𑍇

எவனிடம் ஸகல ஜனங்களாலும் போற்றக்கூடிய உத்தமமான நற்குணங்கள் அதிகமாக இருக்கின்றனவோ அவனுக்கு அக்னியானது ஜலமாக ஆகவும் கடலானது சிறுகுட்டை போலும் மகாமேருவென்கிற மலை அற்பமான கல்லாகவும் சிங்கமானது மானாகவும் அரவம் மாலையாகவும் விஷரஸமானது அமுதம் போலவும் ஆகின்றது-

சாஸ்திரங்களால் தனக்கு விதிக்கப்பட்ட தர்ம்மங்களிலிருந்தும் மாறாமலும் விதிக்குமுறணுள கர்மாக்களைச் செய்யாமலும் நன்னெறியில் செல்லுகிறவனுக்கு எதுவும் அனுகூலமாகவேயிருப்பதுடன் அவையவைகளுக்குள்ள இயற்கையான குணங்களைக்கூட அவனுக்கு விரோதமாகக் காண்பிக்காமல் மாறிவிடுகின்றன. இந்த அபிப்பிராயத்திற்கிணங்கவே ராவணனுலபகரிக்கப்பட்ட ஸ்ரீஸீதாதேவியை மறுபடியும் அழைத்துவர ஸந்தேகம் கொண்ட ஸ்ரீராமன் அவளை அக்கினிப் பிரவேசம் செய்யவேண்டுமென்று சொல்ல தேவியும் அவ்விதமே செய்யுங்கால் அவ்வமயம் ஸீதாதேவிக்கு,

हुताशनश्चन्दनपङ्कशीतलः 𑌹𑍂𑌤𑌾𑌶𑌨𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑌨𑌪𑌙𑍍𑌕𑌶𑍀𑌤𑌲𑌃 ।

அந்த அக்னியானது சந்தனக்குழம்பு போல் நன்கு சீதளமாயிருந்தது என்று ராமாயணத்திலும் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் எவரும் அவரவருக்கிருக்கவேண்டிய குணங்களை ஒருஸமயமும் கைவிடக்கூடாது. சுபம்

உபபத்திராதிபர்,

கலிகால தர்மோபதேஷ்டாக்கள்,

(372-வது பக்கத்தொடர்ச்சி)

वेदोऽखिलो धर्ममूलं स्मृतिशीले च तद्विदाम् ।
आचारश्चैव साधूनामात्मनस्तुष्टिरेव च ॥ मनुः ।

வேதோऽகிலோ தர்மமூலம் ஸ்ம்ருதிஶீலே ச தத்விதாம் ।
ஆசாரஶ்சைவ ஸாதூநாமாத்மநஸ்துஷ்டிரேவ ச ॥ மநு: ।

மந்திர அர்த்தவாதவிதி ஸ்வரூபங்களான சகல வேதங்களும் தர்மஸ்வரூபத்தை அறிவதற்கு முதன்மையான ஸாதனம் பிரத்தியக்ஷமான வேதபாகங்கள் கிடைக்காவிடில் வேதார்த்தங்களை நன்கறிந்த மஹான்களால் வெளியிடப்பட்ட ஸ்மிருதி புராணம் முதலானவைகளைக் கொண்டு தீர்மானம் செய்துகொள்ளவேண்டும். அவைகளாலும் நன்கு நிர்ணயிக்கமுடியாதவிடத்தில் அதாவது ஒரு தர்மானுஷ்டான விஷயத்தில் இரண்டு விதமாக சாஸ்திரங்களின் அபிப்பிராயமிருந்தால் எதை அனுஷ்டிக்கிறதென்று சங்கை ஏற்படுமிடத்தில் காமக்குரோத லோபமோகம் முதலானவைகளில்லாமலும் பொருளில் விருப்பமில்லாமலும் சாஸ்திரார்த்தங்களை நன்கு பைன்று ஆசரிக்கும் ஸாதுக்களுடைய ஆசாரத்தைப் பார்த்துத் தீர்மானித்துக்கொள்ளவேண்டும். இதற்கு உதாஹரணம் மஹாபாரதத்தில் ஒரு குளத்தில் நீருந்தச் சென்ற தம் ஸஹோதரர்கள் அக்குளக்கரையில் மரித்திருக்கும்போது தர்ம்மபுத்திரரான யுதிஷ்டிரரும் அங்கு சென்று அந்த இடத்தில் யக்ஷஸ்ரூபமாயிருந்த தர்மராஜன் கேள்விக்கு விடை பகர்ந்தவுடன் சந்தோஷப்பட்டு இவர்களில் யாரை பிழைப்பிக்கும்படி உமக்கு அபிப்பிராயமென்பதைத்தெரிவித்தால் அவரை உயிருடன் எழுப்பிவிடுகிறேன் என்று யக்ஷன் வினவினன். அதற்கு யுதிஷ்டிரர்

எனது தாய் தந்தையர்களுக்குத் தர்ப்பணம் முதலான பாலோ கத்திற்குற்ற கார்யங்களைடத்த நானிருக்கிறேன் போதுமானது. நகுலனை ஜீவிக்கும்படி செய்து அவனால் மற்ற பிதுர்க்களுக்கும் திருப்தி ஏற்படும்படி செய்யவேணும் என்று வேண்டினார் என்று வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்த இடத்தில் யுதிஷ்டிரர் தம் ஸஹோதரர்களான பீமார்ஜுனர்கள் மரித்திருந்தும் அவர்களை விரும்பாமல் நகுலனை அபேக்ஷித்தது சாஸ்திரங்களில் விதிக்கப் பட்ட தர்மஸூக்ஷ்மங்களைக் கைவிடக்கூடாதென்பதே முக்கிய காரணமாகும். பக்ஷபாதமில்லாமல் தர்ம்மத்தை முக்கியமாய்க் கருதியனுஷ்டிக்கும் இவ்வித மஹான்களே ஸாதுக்களாவார்கள். சாஸ்திரார்த்தங்களில் சந்தேகமேற்படுமிடத்தில் இவர்களுடைய அனுஷ்டானத்தைக்கொண்டு தீர்மானம் செய்துகொள்ளவேண்டு மென்று ஏற்படுகின்றது. இங்கு குறிப்பிட்ட இலக்கணப்படி யுள்ள ஸாதுக்கள் கிடைக்காதகாலத்தில் தம் மனத்திற்கு எதில் திருப்தி ஏற்படுகின்றதோ அதை அனுஷ்டிக்கவேண்டுமென்றும் மனுஸ்மிருதியில் ஸ்பஷ்டமாய் அறிவித்திருக்கிறார். மேலும்

वेदाः प्रमाणं स्मृतयः प्रमाणं धर्मार्थयुक्तं वचनं प्रमाणम् ।
यस्य प्रमाणं न भवेत्प्रमाणं कस्तस्य कुर्याद्वचनं प्रमाणम ॥ हारीतः ।

𑌵𑍇𑌦𑌾𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌯𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌯𑍁𑌕𑍍𑌤𑌂
𑌵𑌚𑌨𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑍍 । 𑌯𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌨 𑌭𑌵𑍇𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌕𑌸𑍍𑌤
𑌸𑍍𑌯 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌚𑌨𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑍍 । 𑌹𑌾𑌰𑍀𑌤𑌃 ।

தர்ம்மாதர்ம்மத்தை நிர்ணயம் செய்யும் விஷயத்தில் முதல் பிரமாணமான வேதங்கள் இரண்டாவதான ஸ்மிருதிகள் மூன்று வதான தர்ம்மார்த்தத்தோடு கூடிய ஸாதுக்களின் வசனம் இவை களைப் பிரமாணங்களாக எவன் அங்கீகரிக்கவில்லையோ அவனால் கூறப்படும் வசனத்தை எவன் பிரமாணமாக அங்கீகரிப்பவன்ஒரு வரும் சாஸ்திரார்த்தங்களைப் பின்பற்றாத ஒருவன் வார்த்தையை நம்பமாட்டார்கள் என்று ஹாரீத மஹர்ஷி வெளியிட்டிருக்கிறார்.

इत्येवं स्मृतिकर्तार एकाविंशतिरीरिताः ।
एतैर्यानि प्रणीतानि धर्मशास्त्राणि वै पुरा ॥
तान्येतानि प्रमाणानि न हन्तव्यानि हेतुभिः ।
यस्तानि हेतुभिर्हन्यात् सोऽन्धे तमसि मज्जति ॥ वैद्य-वर्णाश्रमे।

இத்யேதே ஸ்ம்ருதிகர்த்தார ஏகவிம்சதிரீரிதா: ।
ஏதைர்யானி ப்ரணீதானி தர்மசாஸ்த்ராணி வை த்விஜா: ॥
தான்யேதானி ப்ரமாணானி ந ஹந்தவ்யானி ஹேதுபி: ।
யஸ்தானி ஹேதுபிர்ஹந்யாத் ஸோऽந்தே தமஸி மஜ்ஜதி ॥
வைத்யநாதீயே ।

தர்ம்மசாஸ்திரங்களை இயற்றிய சில மஹரிஷிகளை முன்காண்பித்து இவ்விதம் நிரூபிக்கப்பட்ட ஸ்மிருதி கர்த்தாக்கள் 21 பேர்கள் இவர்களால் லோகோபகாரத்தின் பொருட்டு முன்வெளியிடப்பட்ட தர்மசாஸ்திரங்கள் மிகவும் பிரமாணமானவைகள் இவைகளை ஆபாஸங்களான யுக்திகளைக்கொண்டு தள்ளக்கூடாது. எவன் இந்த தர்ம சாஸ்திரங்களை யுக்திகளால் சரியல்லவென்று விலக்குகிறானோ அவன் அந்த தமஸ் என்று பெயர்பூண்ட நரகத்தில் முழுகிறான் என்று வைத்தினாத தீக்ஷிதவர்ணாச்ரமகாண்டத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இதினால் சிலர் ஆபாஸமான தமக்குத் தோன்றிய சில விபரீத யுக்திகளை ஆதாரமாகக் காட்டி நம் சாஸ்திரங்களில் கூறப்படும் தர்மங்கள் இக்காலத்திற்கு அவ்வளவு பொருத்தமில்லை. மாதம் மும்மாரி பொழிந்து உலகம் சுகித்திருக்கும் காலத்தில் அதாவது முன்யுகங்களில் அனுஷ்டிக்கவேண்டி எழுதப்பட்டன. கலி காலத்திற்காக அவர்கள் எழுதவில்லை. அவைகளை இக்காலத்திலும் சில புஸ்தகப் பூச்சிகளான வைதிகர்கள் அனுஷ்டித்துக் கொண்டு பிறரையும் நிர்ப்பந்திப்பதால் தான் நம் தேசமுன்னேற்றமடையவில்லை என்றும் மற்றும் பலவாறான துர்வாதங்களையும் கூறுகிறார்கள். அவைகளை முடிவு வரையில் வெளியிடுகிறோம். இவ்விதம் சாஸ்திரங்களுக்கு முரணாக யுக்தியால் தர்ம வியவஸ்தை செய்கிறவர்கள் அந்த தமஸ் என்னும் நரகத்திற்கு இரையாகிறார்கள் என்று அறிவிக்கிறார். இவ்விதமே

योऽवमन्येत तेतूभे हेतुशास्त्राश्रयान्नरः ।
स साधुभिर्बहिष्कार्यः नास्तिको वेदनिन्दकः ॥ माधवीये ।

யோऽவமந்யேத தேதூபே ஹேதுசாஸ்த்ராச்ரயாந்நர: ।
ஸ ஸாதுபிர்பஹிஷ்கார்ய: நாஸ்திகோ வேதநிந்தக: ॥ மாதவீயே

எவன் நாஸ்திக மதத்தையடைந்து வைதிகமதத்திற்கு முக்கியப் பிரமாணமாய் விளங்கும் சுருதி ஸ்மிருதிகளை நிந்திக்கிறானோ அவன் நாஸ்திகன் வேதநிந்திகன் அவன் வைதிகமதானுசாரிகளான ஸாதுக்கள் கோஷ்டியில் சேருவதற்கருகமில்லாதவன் ஸாதுக்களும் அவனைத் தம் கோஷ்டியிலிருந்தும் வெளியில் விலக்கிவிடவேண்டுமென்று மனு கருதுகின்றார் என்று பாராசரமாதவீயத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றது.

यस्य निश्वसिता वेदा: யஸ்ய நிஶ்வஸிதா வேதா: என்கிற சுருதியாலும் शास्त्रयोनित्वात् ஶாஸ்த்ரயோநித்வாத் என்கிற உத்திர மீமாம்ஸையின் மூன்றாவது அதிகரணத்தாலும் சுருதிஸ்மிருதி முதலான சாஸ்திரங்கள் அநாதியாயுள்ளவைகளென்றும் ஈசுவரனால் அந்தந்த கல்பத்தின் துவக்கத்தில் வெளியிடப்படுகிறதென்றும் ஸ்பஷ்டமாய்த் தெரிகிறபடியால் அவைகள் விசேஷமஹிமை பொருந்தியவை என்றும் அவைகளிற்கூறப்பட்ட தர்மங்கள் யாவும் பகவானால் ஜனங்களின் க்ஷேமத்தை யுத்தேசித்து உபதேசிக்கப்பட்டதென்றும் அவ்விதமே நாம் சரியாய் தர்மங்களை அநுஷ்டிக்காமலிருந்தால் ஈசுவரனுடைய ஆக்ஞையை மீறின குற்றத்திற்கு ஆளாகவேண்டுமென்றும் புலப்படுகின்றது."

இந்த அபிப்பிராயத்தையே ஸ்பஷ்டமாய் ஸ்ரீமஹாபாரதத்திலும் அச்வமேத பர்வாவில்

श्रुतिस्मृती ममैवाज्ञा यस्तामुल्लंघ्य वर्तते ।
आज्ञाच्छेदी मम द्रोही मद्भक्तोऽपि न वैष्णव इति ।

ஶ்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே ।
ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோऽபி ந வைஷ்ணவ இதி ॥

சுருதிஸ்மிருதி இவ்விரண்டுகளும் உலகநன்மையின் பொருட்டு எம்மால் வெளியிடப்பட்ட உத்திரவாகும். எவன் அந்த உத்திரவை மீறி நடக்கிறானோ அவன் என்னுடைய ஆக்ஞையை மீறினவன். எனக்குத் துரோகம் செய்தவன். என்னுடைய பக்தனென்று சொல்லக்கூடியவனாயிருந்தாலும் இவ்விதமிருப்பவன் என்னுடையவனல்ல. என்னுடைய நிக்ரகத்திற்கே அவன் பாத்திரனாகிறானென்று ஸ்ரீகண்ணபிரான் மொழிகின்றார். இங்கு ஓர் சங்கை நிகழலாம். இந்த ஸ்மிருதிகள் யாவும் சென்றயுகங்க

ளிலனுஷ்டிக்கவேண்டிய தர்மங்களை வெளியிடவந்தனவேயன்றி கலியுகத்தில் நடைபெறவேண்டிய தர்மங்களைப் போதிக்க வந்தவைகளல்லவென்று சில மேதாவிகள் கூச்சலிடுகிறார்கள். அவர்கள் செய்யும் ஆடம்பரத்தைப் பார்த்து சில ஸாமான்ய ஜனங்களும் ஒரு ஸமயம் அவ்விதமிருந்தாலுமிருக்கலாமென்றும் நம்புகிறார்கள். இவை யாவும் தவறேயாகும். இவர்களின் அபிப்பிராயப்படியிருப்பின் ஸ்மிருதிகளில் ஸ்திரீ கர்மம் புருஷகர்மம் சூத்ர தர்மம் வைச்யதர்மம் ஆச்ரமதர்மம் ஜாதிதர்மம் என்றும் ஒருவருடைய தர்மத்தை மற்றொருவர் செய்யக்கூடாதென்றும் அவ்விதம் செய்தால் **परधर्मो भयावह:** வரயடூெ லயாவஹஃ பிறருடைய தர்மம் பயத்தை விளைவிக்குமென்று ஸ்ரீபகவான் கூறியவாறு பயனில்லாமல் போவதுமன்றி கஷ்டத்தையும் கொடுக்குமென்று கருதி அவ்விதமில்லாமலிருக்கவேண்டி வெவ்வேறாகப் பிரித்து எப்படி எழுதியிருக்கின்றார்களோ பின்னும் வஸந்த ருதுவில் யக்ஞானுஷ்டானம் செய்யவேண்டுமென்றும் வேதாரம்பத்தைச் செய்யவேண்டியகாலத்தையும் அதை விலக்கி வேதாங்காத்தியயனம் செய்யவேண்டியகாலத்தையும் பின்னும்;பலவாறான காலப் பிரிவுகளையும் எப்படி காட்டியிருக்கின்றார்களோ அவ்விதம் நாங்கள் கிருதயுகத்தில் அனுஷ்டிக்கவேண்டிய தர்மத்தைக் கூறுகிறோமென்றாவது துவாபர யுகத்திற்கு என்றாவது கூறியிருப்பதாகத்தெரியவில்லை.

ஸ்ரீ லக்ஷ்மீ பார்வதீ ஸம்வாதம்

(௩௮௪-வது பக்கத் தொடர்ச்சி)

சிருஷ்டிகாலத்தில் பிரம்மாவுக்கு ஐந்து தலைகள் இருந்தனவென்றும் பிரஜைகளுக்கு மிகவும் பயங்கரமாகத்தோன்றும்அந்த ஐந்தாவது சிரஸ்ஸைபிரஜைகளின் க்ஷேமார்த்தம் பரமசிவன்அறுத்துவிட்டார் என்றும் அதனால் பரமசிவனுக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தியைப் பரிஹரித்துக் கொள்ள அவர் பிக்ஷாடனஞ் செய்தும் தாரக மந்திரத்தை ஜபித்தும் வருகிறார் என்றும் சாஸ்திரங்களிலிருந்து தெரியவருகிறது. இதனால் லோகத்திற்கு க்ஷேமமுண்டாகும்படியான காரியத்தைச் (அது அகார்யமானாலும்) செய்ய

வேண்டும் என்றும் அப்பேர்ப்பட்ட லோகக்ஷேமத்தை யுண்டு பண்ணும் காரியத்தைச் செய்யுங்கால் தோஷம்ஏற்படினும் அதை நாம் பரிஹரித்துக் கொள்ள என்ன பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறதோ அதை யாராயிருந்தாலும் செய்தே தீரவேண்டும் என்ற தர்ம ஸூக்ஷ்மத்தைக் காட்டப் பரமசிவன் பிக்ஷார்த்தியாக விருக்கிறார். என்ற சிறந்த ஸூக்ஷ்மத்தை லக்ஷ்மீ தன்முதல் பிரச்னத்தினால் வெளியிடுகிறாள்.

பார்வதியால் கூறப்பட்ட बलिमखे பலிமகே என்ற மறுமொழியால் ஸர்வலோகசரண்யனான பகவானே தன் பக்தர்களைக் காப்பாற்றக்கேவல அஸுரர்களிடம் போய் எண்சாண் உடம்பை ஒருசாண் ஆக்கிக்கொண்டு யாசித்து அவனை நிக்ரஹம்செய்திருக்கிறார் ஆகையால் ஒருவன் தன்னை அண்டினவர்களைக் காப்பாற்ற யாசனம் முதலான நீசகாரியத்தைச் செய்தும் காத்தல்வேண்டும் என்ற சூக்ஷ்மம் வெளியிடப்படுகிறது.

ताण्डवं क्वाद्य भद्रे தாண்டவம் க்வாத்ய பத்ரே என்ற இரண்டாவது கேள்வியால் பதஞ்ஜலி முதலிய பக்தாகளால் வேண்டப்பட்ட பரமசிவன் அவர்களைத் திருப்திசெய்யவே நர்த்தனம்செய்திருக்கிறார் ஆகையால் தன் பக்தர்களின் மனோபீஷ்டத்தை நிறைவேற்ற நீசமான நர்த்தனம் முதலிய காரியத்லைதக் கையாள வேண்டும் என்ற நீதியானது விளங்குகிறது. இதுவே मन्ये बृन्दा-वनान्ते மன்யே ப்ருந்தாவநாந்தே என்ற பதிலாலும்வெளியாகிறது.

மூன்றாவது பிரச்னோத்தரத்தால் கேவலமான பிராணியாயினும் அதனால் நமக்கு நன்மையுண்டென்றும், சிறு துரும்பு ஆனாலும் பல்குத்த உதவும் என்றும் வெளியிடப்படுகின்றது. வராஹமாயிருப்பினும் ஹிரண்யாக்ஷன் என்ற கொடிய அரக்கன் ஸம்ஹரிக்கப்பட்டான் அல்லவா?

நான்காவது பிரச்னோத்தரத்தால் பகவானாயிருந்தாலும் புவியில் அவதாரமெடுத்துவிட்டால் எந்தக்குலத்தில் அவதாரமோ அந்தக்குலத்தின் தர்மத்தையும் எந்த யுகத்தில் அவதாரமோ அந்த யுக தர்மத்தையும் எந்த வயதோ அந்த வயதுக்கேற்ற தர்மத்தையும் அனுஷ்டிக்கவேண்டும் என்று புவியில் அவதரிக்கும் மற்ற தேவதைகளுக்கு ஹிதோபதேசம் செய்யவே, பகவானானவர் மனுஷ்யர் முதலிய ரூபங்களை எடுத்து அதற்கனுகுணமான

காரியங்களையே செய்து லோகவிடம்பனம் செய்கிறார். கோபர்களின் குலத்தில் பிறந்தால் மாடுகளை மேய்த்துத்தான தீரவேண்டும் என்ற நீதி வெளியாகிறது. இவ்விஷயத்தில் பிரமாணம்:—

प्रजायते हि यत्कुले यथा युगं यथा वयः ।
तथा प्रवर्तनं भवेद्दिवौकसां समुद्भवे ॥
इति स्वधर्ममुत्तमं दिवौकसां प्रदर्शयन् ।
अधर्मपावकोऽपि सन्विडम्बते जनार्दनः ॥

𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌤𑍇 𑌹𑌿 𑌯𑌤𑍍𑌕𑍁𑌲𑍇 𑌯𑌥𑌾 𑌯𑍁𑌗𑌂 𑌯𑌥𑌾 𑌵𑌯𑌃 ।
𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 𑌭𑌵𑍇𑌦𑍍𑌦𑌿𑌵𑍌𑌕𑌸𑌾𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑍇 ॥
𑌇𑌤𑌿 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 𑌦𑌿𑌵𑍌𑌕𑌸𑌾𑌂 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌯𑌨𑍍 ।
𑌅𑌧𑌰𑍍𑌮𑌪𑌾𑌵𑌕𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍𑌵𑌿𑌡𑌮𑍍𑌬𑌤𑍇 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃 ॥

மேற்கண்டவாறு சிறந்த தர்ம ஸூக்ஷ்மங்களையுடைய ஸமுத்திர ராஜ கன்னிகையான லக்ஷ்மிதேவிக்கும் ஹிமவத் பர்வத ராஜ குமாரியான பார்வதிக்கும் நிகழ்ந்த லீலா ஸம்வாதத்தால் வெளியிடப்பட்ட தர்ம ஸூக்ஷ்மங்களை நாமும் முடிந்த வரையில் அனுஷ்டித்து அவர்களுடைய அனுக்கிரகத்திற்கு பாத்திரர்களாவோமாக.

சுபம்.

ஸ்ரீ மாத்வஸபை, கும்பகோணம்.

M. ராம ராவ்,
காரியதரிசி.

பெருந்தன்மை.

பெருந்தன்மை பெரியாரது தன்மை. இது மக்களாவார்க்கு இன்றியமையாது இருக்கவேண்டிய குணங்களுள் ஒன்று.

இது செய்தற்கு அரிய செயல்களைச் செய்தல், தருக்கின்மை, பிறருடைய குற்றங்களைக் கூறாமை போன்ற நற்குண நற்செய்கைகளால் உண்டாவது. மேன்மேலும் நிலைமையை உயர்த்துவதாகிய இக்குணத்தைப் பெற முயலுபவரிடத்தில் தமது நிலைமையில் தாழாதிருத்தலாகிய தன்மையும் ஒருதலையாக இருத்தல் வேண்டும்.

'பிறரால் செய்ய இயலாத காரியங்களையே நாம் செய்து முடித்தல் வேண்டும்' என்று எண்ணி முயலக் கூடிய பேரூக்கம் உள்ள ஒவ்வொருவரும் இத்தன்மையானரே ஆவர். அந்த ஊக்கம் அளவிறந்து செய்யும் உதவியாலும், வரையாது கொடுக்கும் கொடையாலும் வளர்வதாகும்.

மக்களாவார்க்குப் படிப்பு பொதுவாகுமாயினும், செய்கின்ற தொழில்களால் வேறு சிறப்பியல்புகளும் உண்டு. பிறரால் செய்தற்கு அரிய செயல்களைச் செய்யாது, செய்தற்கு எளிய செய்ல்களைச் செய்துகொண்டு திரிபவர் உயரிய இடங்களில் இருப்பவரானாலும் பெரியவர் ஆகார்; சிறியவரே ஆவர். பிறரால் செய்தற்கு எளிய செயல்களைச் செய்யாது, செய்தற்கு அரிய செயல்களைச் செய்துகொண்டு திகழ்பவர் வறிய நிலத்தில் இருப்பவரானாலும் சிறியவர் ஆகார், பெருந்தன்மைக்குரிய பரியெவரே ஆவர்.

தமது கற்பு நிலையினின்றும் வழுவாது பெருமிதத்துடன் விளங்கும் பத்தினப் பெண்டிர்களது செயல்போலத் தமது நிறை குணத்தினின்றும் வழுவாது தம்மைக்காத்துக்கொள்ளும் குணம் செயல்களைப் பெற்றுள்ளவர் இடத்திலேயே பெருந்தன்மை தங்கி நிற்கும். மனம் மொழி மெய்களை ஒடுக்கி, ஒப்புரவறிதலால் இஃது ஓங்கி வளரும். இங்ஙனம் பெருமையைப் பெற்றவரே வறியரான காலத்தும் செய்தற்கு அரிய செயல்களைச் செய்து முடிக்கும் திறம் பெற்றவர் ஆவர்.

இத்தகைச் சீரியாது பெருமையை உணரும் வன்மையைச் சிறியாரிடம் காணுதல் அரிதாம். அச்சிறியார் தங்களது குடிமை, செல்வம், கல்வி என்ற இவற்றைக் கண்டே வியந்து நிற்பார். இவை அப்பெரியாரிடத்தில் இயல்பாக அமைந்து கிடப்பன என்பதை அறிய மாட்டார். அன்றியும், இவை பெரியாரிடம் இருந்தால் பெரும்பயனை விளைவிக்கும். சிறியாரிடம் இருந்தால் செருக்குக்கு உள்ளாக்கித் தொல்லையை விளைவிக்கும். இந்த உண்மையையும் அச்சிறியார் உணருவதில்லை.

பெருந்தன்மை மிக்கவர் ஒன்றும் பணிந்தே அடங்கி நடப்பர்; சிறியார் போல் தறிதலையாகத் திரியமாட்டார்; தம்மைப்

பற்றிப் பெருமை பேசிக் கொள்ளக் காரணம் இருந்தும் அங்ஙனம் பேசிக்கொள்ள மாட்டார். பிறரது பெருமையையே பேசுவார். இவரே அனைத்துக் குணங்களும் நிறைந்த சான்றோர் ஆவர்.

இது செய்யத்தக்கது; இது செய்யத்தகாதது; என்று உணர்ந்து செய்யும். அறிவு, ஆற்றல்களைப் பெற்றவரே எல்லா நற்குணங்களையும் இயல்பாகப் பெற்றவர். மக்களாவார்க்குக் குணநலமே நலமாவது; உறுப்புக்களின் நலம் எதும் நன்மையைத் தருவதாகாது.

இப் பெரியவரே சான்றாண்மை மிக்கவர் என்று கூறப்படுவார். சான்றாண்மை நிறைந்த குணங்களை உடைத்தாயிருத்தல் என்று பொருள்படும்.

சுற்றத்தார் மேலன்றிப் பிறர் மாட்டும் தோன்றும் அன்பு, பழிபாவங்களுக்கு நாணுதல், யாவர் மாட்டும் உதவி புரிதல், பகைவர் மேலும் கண்ணோட்டம் கொள்ளல், எவ்விடத்தும் உண்மை நிலை பிறழாதிருத்தல் என்ற இந்த ஐந்துமே சான்றாண்மையைத் தாங்கும் தூண்களாம்.

ஓர் உயிரையும் கொல்லாத அறச்செயலால் தவம் வளருவது போலப் பிறருடைய குற்றங்களைச் சொல்லாத அறச்செயலால் சான்றாண்மை வளரும். சான்றாண்மையின் அறிகுறியாகிய அடக்கமே பகைவரை மாற்றும் படையாவது. தன்னைப் 'பிறர்க்குத் தாழ்ந்தவன்' என்று சொல்லிக்கொள்வதில் வெட்கப்படாதவனே சான்றாண்மை மிக்க பெருந்தன்மையாளன் ஆவான். காரணமின்றித் தனக்குத் துன்பத்தைச் செய்தவர்க்கும் இன்பத்தைச் செய்ய முயலாதவன் சான்றோன் ஆகமாட்டான்.

சான்றோர்க்கு வறுமை இழிவைத் தருவதொன்றன்று, பெருந்தன்மை குன்றுவதே இழிவைத் தருவதாம். ஆதலின. அன்னார் ஊழிக்காலத்திலும் தமது நிலைமையினின்றும் பிறழமாட்டார். 'தமது நிலை தவறின் உலகமே திரிந்து விடும்' என்பதை அன்னார் உணர்ந்திருப்பர். அவரே உலகினரைத் தமது வசப்படுத்தற்கு உரியவர். அவர் எப்பொழுதுக் நீதியையும் தருமத்தையுமே விரும்பி நடப்பவர்; விளையாட்டாகக்கூடப் பிறரைப் பழித்துரையாடல் கூடாதது' என்ற கோட்பாட்டினை உடையவர்

இத்தகையினரைப் பெற்றிராத உலகம் இருப்பதிலும் இல்லாமையே நல்லதாம். சான்றாண்மை மிக்க பெருந்தன்மையைப் பெற்றிராத மக்கள் மனிதஉருக்கொண்டிருப்பினும் மரம் போன்றவரே. பண்பில்லாதவரது செல்வம் பாத்திரத்தின் கெடுதலால் அவை கெட்டுப்போன பாலுக்குச் சமமாம். ஆதலின், மக்களாய்ப் பிறந்தார் ஒவ்வொவருவரும் பெருந்தன்மை உடையாராய்ச் சான்றாண்மை மிக்கு அன்புற்று இன்புற்று வாழ்வாராக.

தண்டமிழ்த்தொண்டன்.

தீண்டாமைக்கு முடிவுகாலம்.

இத்தலைப் பெயருடன் (7—7—27) வியாழக்கிழமை மித்திரனில் எடிடோரியல் கலத்தில் பத்திராதிபர் ஓர் விஷயம் எழுதியிருக்கிறார். இதில் விசாரிக்கவேண்டிய விஷயம் ஆஸ்திகர்களுக்கு மிக உண்டு. ஆகவே அதில் நுழைவாம்.

தீண்டாமை என்னும் பூச்சி ஹிந்து ஸமூகத்தை வெகுகாலமாக அரித்து வருகிறதாம். இதுவரை நாட்டுக்கும் நம் இந்து ஸமூகத்திற்கும் இக்கொடிய வழக்கத்தால் எண்ணிறந்த தீங்குகள் ஏற்பட்டு விட்டனவாம் இவ்விதம் பத்திராதிபரின் கூற்று. தீண்டாமைப் பூச்சியை எந்த டாக்டர் எந்தக்கண்ணாடியால் பார்த்து சோதித்துப் பத்திராதிபரிடம் காண்பித்தார். நம் நாட்டையும் இந்து ஸமூகத்தையும் இது எவ்விதமாய் கெடுத்து வந்தது. வருகிறது என்பதை நம்போன்றவர்களுக்கு விளக்கிக் காட்டினாலல்லவா ஏனையோர் அறிந்துகொள்ள வழி ஏற்படும். ஒன்றுமில்லாமல் தலையும் காலுமில்லாமல் கூறிவிட்டால்அது ஆஸ்திகர்களுக்கு எப்படிமனத்திருப்தியையுண்டுபண்ணும்.வெகுகாலமாய் என்றால் சுமாராய்க் காலத்தை வரையறுக்க முடியாதா. இந்தப்பூச்சி எக்காலத்தில் எதனால் உண்டானது. அக்காலத்தில் இப்போதியவர்கள் போல அது கெட்ட பூச்சி என்று சூக்ஷ்மமான உண்மையை அறிய அறிஞரில்லாமலாய் விட்டனரா. இதொன்றுமில்லை. தீண்டாமைப் பூச்சி என்பதே கிடையாது. இனி ஒருவன் வீட்

டில் தகப்பன் தாய் மரித்தல் அங்கு தீண்டாமைப் பூச்சி உட்கார்ந்து கொண்டிருக்குமா வந்தவனை எல்லாம் ப்ளேக் பூச்சிபோல் பிடித்துக்கொள்வதுண்டா. உண்மையில் ப்ளேக்பூச்சியும் வந்தவனையெல்லாம் பிடித்துக் கொள்கிறதா. இல்லை. விதிமுடிந்தவனுக்கு மருந்தாலும் வரக்கூடும். விதிமுடியாதவன் ப்ளேக்கில் இறந்த பிணத்தைக் கட்டிப் புறண்டாலும் அவனையாதும் செய்வதில்லையென்பது நமக்கு அனுபவஸித்தம். இவர் தீண்டாமை பூச்சி ஒன்றை ஸ்ருஷ்டித்து விடுகிறார். இவர்கள் நினைக்கிறபடி தீண்டாமை இந்து ஸமூகத்தையும் நாட்டையும்கெடுக்கவேயில்லை அநாதிகாலந்தொட்டு உலாவி வந்துகொண்டிருந்த இத்தீண்டாமை நாட்டுக்கும் நமக்குமன்றி நம் புறமதத்தர்களையும்கூட க்ஷேமத்திற்குள்ளாக்கிக் கொண்டு வந்தது இதை அக்காலம் மகிமையுடன் கொண்டாடினர். நமது வீட்டில் ஸ்திரீ மாதவிடாய் அடையும்போது அவளிடத்தில் வந்த தீண்டாமையை எட்டவே வைத்து க்ஷேமம் பெற்றனர். சாவுகாலத்திலும் ஜனனகாலத்திலும் ஏற்படும் பூச்சியுள்ளவர்கள். சமீபத்தில் ஒருவாறு உட்கார்ந்திருப்பினும் அவர்களையும் அவர்களது பதார்த்தங்களையும் தொடாது விலக்கி வைத்து வந்தனர். ஸ்நானம் செய்துவிட்டு தேவதாராதனத்திற்காக கிருகத்திற்கேகும் கிருகஸ்தன் விழுப்பென்ற தீண்டாமைப் பூச்சியை வைத்திருக்கிறானென்று புத்திரனைத்தொடாமல் பிரீதியை மட்டிலும் செலுத்தி வந்தார்கள்.

நான்காவது வருணத்தவர்களிடம் தீண்டாமைப்பூச்சிக்காகத் தொடாமலே அவர்களுடன் கூடிக்கலந்திருந்தனர். ஐந்தாவது ஜாதியரிடமுள்ள பூச்சியைக் கண்டு அவர்களை தூரத்தில் நிறுத்தியே கார்யசித்தி பெற்று வந்தனர். இவ்வளவுக்கெல்லாம் சரித்திரமும் அனுபவமும் நமக்கு இப்போதுமிருக்க தீண்டாமைப் பூச்சி நாட்டைக் கெடுத்ததென்று சொன்னால் கேட்கிறவர்களுக்குத் தான் புத்தி இராதா. ஏதோ நமக்கு நாளை காலையில் கிடைக்கின்ற ஸ்வராஜ்யத்திற்குப் பரம விரோதிகளாயுள்ளவர்கள் இத்தீண்டாமையைக் காரணம் சொல்லி ஸ்வராஜ்யம் கொடுக்கமாட்டேனென்கிறார்களாம். இவ்விதமெல்லாம் கூறுவார்களா. மதவிஷயமானசில அநுஷ்டானங்களை ஏதோ ஆமைஆமை என்றால்இவ்விதம் ஆமை இல்லாத மதம் எங்குண்டு. அவர்கள் ஆமை என்று சொல்லிக்

கொள்ளாவிடினும் வேறு பெயருடன் பல பல வித்யாஸமுள்ள வர்களாயும் அவர்கள் தொட்டதைக்கூடத் தொடாமலும் அவர்கள் உட்கார்ந்தவிடத்தில் உட்காராமலும் சில சமயங்களில் சண்டைகளால் கதியற்று உயிரைக் கூடமாய்த்துக் கொள்கிறார். இத்தகைய ஸம்பவம் பேபர் மூலம் தினசரி காணநேரிடும். ஆகவே அவர்கள் நம்மைப்பார்த்து இந்த ஆமையை விரட்டிவிட்டுவா வென்று சொல்லவே மாட்டார்கள். சொன்னால் உன் ஆமையை நீ விலக்கினையா யென்று நாம் கேட்போம். அப்போது அவன் என்ன சொல்வானோ. இருக்கட்டும் இதன் தத்துவத்தை நன்கு ஆராய்ந்து அறியாமல் அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று ஒருவரிடத்தில் தானே மகிமையை ஏற்றிவிட்டுப் பிறகு அவர் சொல்வதெல்லாம் வேதமென்று நினைப்பதுண்டா. உண்மையில் நம் நாட்டில் தீண்டாமை இருந்தமட்டிற்கும் க்ஷேமம் தழைத்தோங்கியது. காலங்களில் மழையும் மந்திரஸித்திகளும் மும்முறமாய் இருந்தன. தீண்டாமை என்பதற்கு உண்மையான அர்த்தம் வர்ணாசிரமானுஷ்டானமென்பதே. ஆகவே வர்ணாசிரம தர்மம் இந்து மதத்திற்குக்கேடுவிளைவிக்குமா? வர்ணாசிரமதர்மம் இல்லையென்றால் இந்து மதமே இல்லையென்றுதான் சொல்லவேண்டும் கோடிக் கணக்கான தீண்டாதவர்கள்மேல் இந்துக்களால் ஒடுக்கப்பட்டு தரித்திரதசையிலிருந்து சாகிறார்களாம். இவ்விதம் கூறி ஒன்றுமறியாதவர்களை மோசம் செய்யப்பார்க்கிறார். ஒருவரும் ஒடுக்கவே படவில்லை. வேதவரம்பிற்குக் கட்டுப்பட்டு அனாதிகாலம் தொட்டு அவரவர்கள் அங்கங்கே இருந்துகொண்டு க்ஷேமலாபத்தை அடைந்து வருகிறார்கள். அவ்விதம் இருப்பவர்களைத் தட்டி எழுப்பி ஒருவருக்கொருவர் குடுமிபிடித்துச் சண்டைக்கு விட்டுப் பார்க்கக் கிளம்பியிருக்கிற சில விஷமிகளுடைய வார்த்தையை இவர்களும் நம்பி இவ்விதம் எழுதுகிறார்கள்

இவ்விதம் நம்புவதற்குக் காரணம் நம்மதத்தின் நுட்பமும் மகிமையும் தெரியாக்காரணம் என்று தான் சொல்லவேண்டும். வேறு எதைச்சொல்வோம். ஏதோ கலிமகிமையால் புறமதஸ்தன் நம்மை ஏளனம் செய்தவார்த்தைகளை நம்மதத்திற் பிறந்தவர்களும் கூற ஆரம்பித்து விட்டனர். ஏதோ கோடிக்கணக்கான தீண்டாதவர்களைப் பள்ளத்தாக்கிலிருந்து தூக்கிவைக்கப்

போகிறார்களாம். மேடு சரிந்து பள்ளத்தில் விழுந்து விடுமென்றும் பிறகு தூக்கிவைத்து அதன் தலையில் விழுந்து ஒன்றோடொன்றுமுண்டு புறண்டு சீர்கேடாய்விடுமென்பதை ஒருவருமறியவில்லை. இவர்கள் தீண்டாமைக்கு முடிவுகாலமென்று சந்தோஷமாய்த் தலையங்கம் கொடுத்துக் கொண்டதற்குக் காரணம் இது. பெங்களூரில்3ந்-தேதி அகில இந்தியதீண்டாமைவிலக்கு மகாநாடு கூடியதாம். அதை பண்டிதமாளவ்யா திறந்து வைத்தனராம். அவர் உத்தமப் பிராமணராய்ப் பண்டிதராயுமிருப்பவராம். அவரே ஒருவர் மற்றவரைத் தீண்டாதவரெனப் பாவிப்பது மகாபாபம். அக்கிரம் என்று சொல்லிவிட்டாராம். அதனால்தான் நம் மித்திரனதிபர் இனி தீண்டாமைக்கு முடிவுகாலம்தான் என்று தீர்மானம் செய்துவிட்டார். பாவம் என் செய்வார். மாளவ்யா உத்தமப் பிராமணர் பண்டிதர் என்று பிராமாண்யத்தை மேல் என்றும்ஸம்ஸ்கிருத பாண்டித்யம் உள்ளது மிகவும்மேலென்றும்ஒப்புக்கொள்கிறார். பிறகு எல்லோரும் சமம் என்று எவ்விதத்திற் கூறுவதோ தெரியவில்லை. இருக்கட்டும் மாளவ்யா சொன்னதெல்லாம் பிரமாணமென்று யாரும் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும் என்றும் எங்கேயாவது பெரிய மகாநாடு இந்தியாவில் கூடி எல்லோரும் ஏகமனதாய்க் கையொப்பம் செய்து பிரமாணம் கொடுத்துவிட்டனரா. மனு எதெல்லாம் சொன்னாரோ அதுமருந்து என்று சுருதியே கூறிவிட்டதென்று மனுவின் வாக்குக்கு கௌரவம் உண்டு. அதுபோல்தானா, அப்படி இல்லாவிடில் வேதசாஸ்திரங்களுக்கும் மகரிஷிகள் ஆசார்யர்களுடைய கொள்கைக்கும் பூர்ணவிரோதமாய் மாளவ்யா சொன்னால் ஆஸ்திக வம்சததில் பிறந்து வேதம் சாஸ்திரம்தான் நமக்குப்பிராமாணமென்று நினைப்பவன் அவர் வசனத்தைப் பொருட்படுத்தவே மாட்டான். ஆகவே தீண்டாமை இன்று ஒழியாது. நாளையொழியாது. என்று தீண்டாமை ஒழிந்ததோ அன்று வர்ணாசிரமதர்மம் ஒழிந்தது என்று வர்ணாசிரமதர்மம் தொலைந்ததோ அன்று இந்துமதமென்பதுபாழாகும். அதன் பிறகு நேருவதை எழுதஇறகுநடுங்குகிறது. ஆசாரியரின்கிருபையால் இந்துமதம் வாழ்க. வர்ணாசிரமதர்மம் வாழ்க. சுபம்!

எம். என். சுப்பிரமணிய சாஸதிரிகள்.

பொன்மலையில் பிரம்மஸ்ரீ போலகம்சுந்திரசாஸ்திரிகள் அவர்களால் செய்யப்பட்டுவருகிற பகவத்கீதா உபந்யாஸத்தின் சுருக்கம்.

(278-வது பக்கத்தொடர்ச்சி)

7-வது அத். சு. 16. ஆகிலும புண்யசாலிகளும் என்னை பஜனம் செய்கிறவர்களுமான சிலர் நான்கு வகைப்பட்டவர்கள். அவர்கள் முறையே 1. "ஆர்த்தன்" சரீரவியாதி மனக்லேசம் முதலிய உபத்திரவகாலங்களில் என்னை தியானிப்பவர்கள் உதாரணமாக இந்திரனுல் "அதிவிருஷ்டி" என்னும் உபத்திரவம் வந்தபோது ஈச்வர பஜனம் செய்த கோபர்கள், ஜராஸந்தனுடைய கைதிகளாகி விடுதலையடைய பகவானைப் பிரார்த்தித்த ராஜாக்கள் வஸ்திராபஹரணகாலத்தில் ஸ்ரீ கிருஷ்ணனை தியானித்த திரௌபதி, முதலையால் பிடிக்கப்பட்டபோது ஆதிமூலமே என்று அலறிய கஜேந்திரன் முதலானவர்கள். 2. "ஜிஞ்ஞாஸு"—பரமாத்ம ஞானம் வேண்டுமென்பதில் இச்சையுள்ளவர்கள் உதாரணமாக முசுகுந்தர், ஸ்ருததேவர், ஜனகர், உத்தவர் முதலியவர்கள். 3. "அர்த்தார்த்தி"— இகலோக, பரலோக, அர்த்தத்தை அபேக்ஷிப்பவர்கள். உதாரணமாக சுக்ரீவன், விபீஷணன், உபமன்யூ முதலியவர்கள் இவ்வுலகிய அர்த்தத்தில் ஆசையினுலும், துருவன் போன்றவர்கள் பரலோகத்தில் ஆசையினுலும் என்னை பஜித்தவர்கள். 4. "ஞானி" யாதொருவிதமான ஆசையுமின்றி ஸகலத்தையும் பகவனுகப் பார்ப்பவன்.

பகவத்குணமானது நாரதர், பிரஹ்லாதர், சுகர், ஸநகாதிகள் முதலிய பிரம்மஞானிகளின் சித்தத்தைக்கூட தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளும் விசேஷ குணமுள்ளது. "ஞானீச" என்பதினுல் நிஷ்காம பக்தனையும் ஞானியாகக்கொள்ளுகிறுர். அவனிடம் பிரம்மஸாக்ஷாத்காரம் இல்லாதிருந்தும் ஞானி எப்படியாவன்யெனில் ஈச்வரனைத் தவிர வேறு எண்ணத்தை ஒருபோதும் ஸ்மரிக்கிறதில்லையாகையால் ஈச்வரன் அவசியம் சீக்கிரத்தில் ஞானத்தைக் கொடுக்கிறபடியால் ஞானிகளில் சேர்க்கப்படுகிறுன். ஆக இப்படி வியாதி முதலிய துன்பத்தையடைந்தவன், ஆத்மஸ்வரூபஞானமடைய இச்சையுள்ளவன், பொருளைக் கோறுகிற

வன், பிரம்மஞானி இப்படிப்பட்ட நான்குவிதமான புண்ணியசாலிகளான ஜனங்கள் என்னை பஜிக்கிறார்கள்.

சு. 17. இவர்களில் நிலையான யோகத்தையும் என் ஒருவனிடத்திலேயே பக்தியையுமுடைய ஞானியானவன் சிரேஷ்டனாகிறான். நான் அந்த ஞானியினிடத்தில் மிகுந்த பிரியமுள்ளவன். அவனும் என்னிடத்தில் மிகுந்த பிரியமுள்ளவன்.

சு. 18. எனக்கு பக்தர்களான நால்வர்களும் சிலாக்கியர்கள் தான். ஆனால் ஞானியானவன் எனது ஆத்மாவென்றே என் தீர்மானம். ஏனெனில் அவன் மனது என் ஸ்வரூபம் ஒன்றைத் தவிர வேறொன்றையும் கவனியாது அதையே நாடியிருக்கிறது. ஆகையால் ஞானிக்கும் எனக்கும் கொஞ்சங்கூட பேதமேயில்லை.

சு. 19. எத்தனையோ ஜென்மங்களின் புண்ணியவிசேஷத்தினால் விருத்தி பண்ணப்பட்ட ஸம்ஸ்காரத்தினால் சித்தபரிபாகம் ஏற்பட்டு ஸகலமான ஜெகத்தும் வாஸுதேவன் என்ற ஞானத்தையடைகிறான். அவன் அபரிச்சின்னபுத்தியுடையவனாகிறான். அதாவது வியாபகமாக இருக்கும் வஸ்துக்களெல்லாவற்றையும் பரமாத்மாவாக அறிகிறவன். அவனே மகாத்மா. அப்படிப்பட்டவன் அகப்படுகிறது ரொம்பவும் துர்லபம். இந்தக்காரணத்தாலும் ஞானியே சிரேஷ்டனாகிறான்.

சு. 20. ஞானமற்றிருக்கிற ஜனங்கள் தங்களுடைய பூர்வ ஜென்ம வாஸனை அதாவது சுவபாவமாய் ஏற்படக்கூடிய குணங்களுக்குக் கட்டுப்பட்டு தங்களுடைய இச்சைப்படி வேண்டிய விஷயங்களையெல்லாம் அடைவதற்கு வேண்டிய விரதாதிகளை நியமங்களோடு செய்து இதர தேவதைகளை பஜிக்கிறார்கள்.

சு. 21. எந்த பக்தன எந்த தேவதையை விசுவாஸத்துடன் பஜிக்கிறதற்கு இச்சிக்கிறானோ அவன் பக்தியை அந்தந்த தேவதையினிடத்தில் ஸ்திரமாகவிருக்கச் செய்கிறதும் அதை விருத்தி செய்கிறதும் நானே.

சு. 22. இந்த பக்தன் ஸ்திரமான விசுவாஸத்துடன் தேவதையை ஆராதனம் செய்யமுயலுகிறான். அதனால் என்னாலேயே கொடுக்கப்பட்ட பலன்களையுமடைகிறான். நானே அந்தந்த தேவதாரூபியாக இருந்து அந்தந்த பலத்தைக் கொடுக்கிறேன்.

(தொடரும்)

வி. என். ராமனாதன்.